# தென்காசி நகராட்சி

## 17.03.2022 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் மன்றப்பொருள்

**மன்றப்பொருள் : 1**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு தாமிரபரணி குடிநீர் திட்டத்தின் கீழ் ஊர்க்காடு, மன்னார்கோவில், திருமலையப்பபுரம், ஆசிர்வாதபுரம் மற்றும் தென்காசி வாய்க்கால்பாலம் ஆகிய 5 இடங்களில் உள்ள நீரூந்து நிலையங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் 5 இடங்களில் உள்ள மின்மோட்டார்களை இயக்கவும், பராமரிக்கவும் இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 13 நபர்கள் தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31.03.2022ல் முடிவடைகிறது. எனவே மேற்படி குடிநீர் பணிக்கு ஏப்ரல் 2022 முதல் ஜீலை 2022 வரை மின்மோட்டார்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 2**

தென்காசி நகராட்சி பகுதிக்கு குடிநிர் விநியோகம் செய்யும் நீர்தேக்க தொட்டிகள் 4 எண்ணம் உள்ளது. மேற்படி நீர்தேக்கங்கள் மதுரை ரோடு, மலையான் தெரு மற்றும் ஆபாத் பள்ளிவாசல் தெரு ஆகிய இடங்களில் நீர்தேக்க காவலர் இல்லாததால், மேற்படி நீர்தேக்க காவலர் பணி நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.03.2022ல் முடிவடைகிறது. எனவே ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை நீர்தேக்க காவலர் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ6.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 3**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோக செய்ய போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.03.2022ல் முடிவடைகிறது. எனவே மேற்படி பணிகள் ஏப்ரல் 2022 முதல் செப்டம்பர் 2022 வரை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ6.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 4**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் 290 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு அடிபம்புகள் மூலம் குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி அடிபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நிவர்த்தி செய்ய நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி தனியார் மூலம் மேற்படி அடிபம்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.03.2022ல் முடிவடைகிறது. எனவே ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை அடிபம்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 5**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 8 வரையுள்ள வார்டுகளில் சிறுபாலங்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் சாலைகள் சில இடங்களில் பழுதாகி உள்ளதாக மன்ற உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததை அடுத்து, மேற்கண்ட பணிகளின் பழுதினையும், குடிநீர் பணி பழுதுகளையும் சரிசெய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 6**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 9 முதல் 16 வரையுள்ள வார்டுகளில் சிறுபாலங்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் சாலைகள் சில இடங்களில் பழுதாகி உள்ளதாக மன்ற உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததை அடுத்து, மேற்கண்ட பணிகளின் பழுதினையும், குடிநீர் பணி பழுதுகளையும் சரிசெய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 7**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 17 முதல் 24 வரையுள்ள வார்டுகளில் சிறுபாலங்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் சாலைகள் சில இடங்களில் பழுதாகி உள்ளதாக மன்ற உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததை அடுத்து, மேற்கண்ட பணிகளின் பழுதினையும், குடிநீர் பணி பழுதுகளையும் சரிசெய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் : 8</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 25 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் பழுதடைந்த சிறுபாலங்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் சாலைகள் சில இடங்களில் பழுதாகி உள்ளதாக மன்ற உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததை அடுத்து, மேற்கண்ட பணிகளின் பழுதினையும், குடிநீர் பணி பழுதுகளையும் சரிசெய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ9.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் : 9</u>**

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான (மத்தளம்பாறை ரோடு) உரக்கிடங்கில் 40KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் FSTP (Faecal Sludge Treatment Plant) அமைக்கும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. மேற்கண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு குறித்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 21978-40/2020/UGSS-2 நாள்.16.03.2021ல் அறிவுறுத்தியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஒரு வருடத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் : 10</u>**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள இரண்டு ஈப்பு வாகனங்கள் மற்றும் குடிநீர் டேங்கர் லாரி ஆகிய வாகனங்களுக்கு நிரந்தர ஓட்டுனர் ஒருவர் மட்டுமே உள்ளார். அதுபோக இரண்டு வாகனங்களுக்கு போதுமான ஓட்டுனர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்படி வாகனங்களை (ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரை) இயக்குவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் : 11</u>**

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19ன் கீழ் BIO-MINING முறையில் குப்பைகளை அகற்றும் பணிக்கு கோயம்புத்தூர் ஸ்ரீ பொம்மு இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு, 17.10.2018ம் தேதியன்று பணி உத்திரவு

வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி முடிப்பதற்கான வழங்கப்பட்ட ஒப்பந்தகாலத்தினைவிட அதிகப்படியான காலம் ஆகியும் இதுநாள் வரை சுமார் 76 சதவீதம் மட்டுமே பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட காலக்கெடுவினையும் தாண்டி அதிகப்படியான நாட்கள் ஆகியும் இதுநாள் வரை மேற்கண்ட நிறுவனத்தால் பணி முடிக்கப்படவில்லை. மேலும் இவ்வலுவலக கடித ந.க.எண்: 877/2018/இ1 நாள்: 02.01.2019, 10.01.2019, 13.03.2019, 24.04.2019, 18.12.2019, 11.09.2020, 25.03.2021, 03.06.2021, 10.06.2021 மற்றும் 31.12.2021 ஆகிய தேதிகளில் அறிவிப்பு கடிதம் மேற்கண்ட நிறுவனத்திற்கு அனுப்பியும் பணிகள் முழுமையான முறையில் முடிக்கப்படவில்லை. மேலும் மேற்படி நிறுவனத்திற்கு இவ்வலுவலக கடித ந.க.எண்: 877/2018/இ1 நாள்: 28.02.2022 இறுதியாக காரணம் கேட்டல் கடிதம் அனுப்பியும் எந்த ஒரு பதிலோ அல்லது நேரில் வந்தோ பணியினை முடிக்கப்படாமைக்கான சரியான காரணத்தினை தெரிவிக்கப்படவில்லை. ஆதலால் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி கோயம்புத்துார் ஸ்ரீ பொம்மு இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை இரத்து செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 கோயம்புத்துார் ஸ்ரீ பொம்மு இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை இரத்து செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்

<u>மன்றப்பொருள் : 12</u>

தென்காசி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2020-21ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் அலுவலக மண்டலசெயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 26/2021/ஆ1 நாள் 29.12.2021ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 28.01.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நீரூந்து நிலையம் மற்றும் மன்னார்கோவில் நீரூந்து நிலையம் ஆகிய இடங்களில் 75HP மோட்டார் விநியோகம் செய்தல் மற்றும் பொருத்துதல் | 35.00 | DECCAN INDUSTRIES, COIMBATORE<br>K.N.Raj Construction, Krishnagiri | 3.50% கூடுதல்<br>19.13% கூடுதல் |
| 2 | ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்தில் 2 எண்ணம் Infiltration Well அமைத்தல் | 30.00 | திரு S.சுடலைமுத்து ஒப்பந்தக்காரர்<br>திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர் | 4.90% கூடுதல்<br>6.25% கூடுதல் |
| 3 | ஆய்க்குடி ரோட்டில் அமைந்துள்ள பசுமை உரக்குடில் மையத்தில் சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் | 27.40 | திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 4.93% கூடுதல்<br>6.20% கூடுதல் |

அ.கு மேற்படி வரிசை எண் 1 முதல் 3 வரையுள்ள பணிகளுக்கு கூடுதலில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் முடிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் : 13**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 290 அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கான பொருட்கள் அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சி, டான்சி நிறுவனத்திடமிருந்து அடிபம்பு தளவாட பொருட்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 14**

தென்காசி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள இலகுரக வாகனமாக ஏழு ஆட்டோகளும், கனரக வாகனங்களாக நான்கு வாகனங்களும் மொத்தம் பதினொன்று வாகனங்கள் உள்ளது. அரசால் தோற்றுவிக்கப்பட்டு பொதுசுகாதாரப்பிரிவில் நான்கு ஓட்டுநர்களுக்கு இரண்டு ஓட்டுநர்கள் மட்டுமே தற்போது நிரந்தர பணியாளர்களாக உள்ளார்கள். காலியாக இரண்டு பணியிடங்கள் உள்ளன. ஆனால் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களின் எண்ணிக்கை மொத்தம் 11 ஆக உள்ளது. ஆகவே ஒப்பந்த அடிப்படையில் கனரக வாகனம் மற்றும் இலகுரக வாகனங்கள் இயக்குவதற்கு 9 ஓட்டுநர்கள் தேவைப்படுகிறது.

எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் தினக்கூலி பட்டியலின் படி 9 ஓட்டுநர்களை பணியமர்த்திடவும், ஒப்பந்தப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும், அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : - பொதுசுகாதாரப்பிரிவில் இலகுரக வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் இயக்குவதற்கு போதிய அளவு ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால் 9 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 15**

தென்காசி நகராட்சியில் தினசரி டெங்கு நோய் தடுப்பு பணிகள், கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள கொசுஒழிப்பு பணியாளர்களை கொண்டு செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி பகுதிகளில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் என மொத்தம் 32000 வரிவிதிப்புகள் உள்ளன. மேலும் நோய் தடுப்பு சுகாதாரப் பணிகள் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின் படி 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் நியமனம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தென்காசி நகராட்சி பகுதிக்கு 105 கொசுஒழிப்பு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

எனவே 105 கொசு ஒழிப்பு பணிகளை ஒப்பந்தம் மூலம் நியமனம் செய்யவும், அதற்கான ஊதியம் மாவட்ட ஆடசித் தலைவர் அவர்களால் அனுமதித்துள்ள தினக்கூலி பட்டியலின் படி ஊதியம் வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : - டெங்கு காய்ச்சல் தடுப்புப் பணி மேற்கொள்ள 105 கொசுஒழிப்பு பணியாளர்களை ஒப்பந்தம் மூலம் நியமனம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 16**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலையத்தில் உள்ள மாமர மேல் மகசூல் குத்தகை உரிம இனத்திற்கு 2021–22 முதல் 2023–24ம் ஆண்டிற்கு 21.01.2021, 16.02.2021, 25.02.2021, 18.05.2021, 10.06.2021, 09.07.2021, 19.08.2021, 06.09.2021, 16.09.2021, 22.10.2021, 11.11.2021, 25.11.2021, 23.12.2021, 30.12.2021,20.01.2022, ஆகிய தேதிகளில் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

தற்சமயம் 09.03.2022ல் நடைபெற்ற பொது ஏலத்தில் 3 நபர்கள் கலந்து கொண்டு கீழ்க்கண்ட விபரப்படி ஏலம் கேட்டுள்ளனர்.

| வ.எண் | பெயர் | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1. | அமீர்ஜான்,<br>372,S.K.P. தெரு,<br>தென்காசி. | ரூ.15000/– |
| 2. | தாதாபீர்,<br>98P/104A2 S.K.P. தெரு,,<br>தென்காசி. | ரூ.16000/– |
| 3. | R,அழகியநம்பி,<br>த/பெ ராமையா,<br>53,தங்கம்மாள் கோவில் தெரு,<br>மேலப்பாவூர். | ரூ.16500/– |

மேற்கண்ட குத்தகை உரிம இனத்திற்கு பொது ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. எனவே பொது ஏலத்தில் உயர்ந்த ஏலக்கேள்விதாரர் திரு, R,அழகிய நம்பி, என்பரின் உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ.16500/– ஆக உள்ளது.

மேலும் மேற்படி குத்தகை உரிம இனத்திற்கு 13 தடவைக்கு மேல் பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரி ஏவரும் கேட்க முன்வராததாலும், போதிய மழை இல்லாததால், மாமர்ம் போதிய காப்பு இல்லாததால், மேற்படி குத்தகை உரிம இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்ளி கேட்டுள்ள திரு. R,அழகியநம்பி என்பவர் கேட்டுள்ள உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ,16500/–ஐ( ஒருவருடத்திற்கு) நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : - மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 17**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலையத்தில் உள்ள கடைஎண்.**62** முதல் **65** (புதியது) கடைகளுக்கு, ஏற்கனவே நடைபெற்ற **21.01.2021, 16.02.2021, 25.02.2021, 18.05.2021, 10.06.2021, 09.07.2021, 19.08.2021, 06.09.2021, 16.09.2021, 22.10.2021, 11.11.2021, 25.11.2021, 23.12.2021, 30.12.2021,20.01.2022**, ஆகிய தேதிகள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் வைப்புத்தொகை செலுத்தி எவரும் பொது ஏலம் கேட்க முன்வரவில்லை.

தற்சமயம் **09.03.2022**ல் நடைபெற்ற பொது ஏலத்தில் கடை எண்.**65** க்கு **2** நபர்கள் கலந்து கொண்டு கீழ்க்கண்ட விபரப்படி ஏலம் கேட்டுள்ளனர்.

| வ.எண் | பெயர் | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1. | P.ராமராஜ்,<br>சக்தி நகர்,<br>ஆய்க்குடி. | ரூ.13000/– |
| 2. | K.இசை தேவா,<br>மங்கம்மாள் சாலை,<br>தென்காசி. | ரூ.12000/– |

மேற்கண்ட புதிய பேரூந்து நிலைய கடை எண்.**65** (புதியது) க்கு, உயர்ந்த ஏலக்கேள்வியானது ரூ.**13000/–** அதிகமாக உள்ளது. எனவே உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.ராமராஜ் என்பரின் ஏலக்கேள்வி தொகை ரூ**13000/–**ஐ ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : - மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 18**

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

தென்காசி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் **02.01.2000**ம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு **25.08.2006**ல் புதிய பேருந்து நிலையம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. தென்காசி புதிய பேருந்து நிலையத்திற்கு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி என பெயரை சூட்டுவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தலைவர்
தென்காசி நகர்மன்றம்

# தென்காசி நகராட்சி

## 17.03.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் மன்ற பொருள்

### மன்றப்பொருள் 1

15வது நிதிக்குழு மான்யம் Un Tied Grant 2021 – 22ம் ஆண்டுக்கான நிதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த வழிகாட்டுதல்களின்படி கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க எண் 31116/2021/அம்ருட்–2 நாள் 05.01.2022ல் ரூ86.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ஏற்கனவே ரூ18.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மீதமுள்ள தொகை ரூ68.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட விவரப்படியான பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வடக்கு ஒப்பனை பிள்ளையார் கோவில் தெரு முதல் (145015R347) மவுண்ட் ரோடு வரை மழைநீர் வடிகால் அமைத்தல் | 29.50 |
| 2 | கட்டுபாவா பள்ளிவாசல் பள்ளி (145007R269) முதல் மலையான் தெரு சுப்பிரமணிய சுவாமி கோவில் வரை மழைநீர் வடிகால் அமைத்தல் | 20.00 |
| 3 | வார்டு எண் 17 நடுமாதாங்கோவில் தெருவில் (145015R351) சிமெண்ட் தளக்கற்கள் சாலை அமைத்தல் | 9.60 |
| 4 | வார்டு எண் 1 ஜமாலியா நகரில் (145001R108) மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 5 | வார்டு எண் 31 சிந்தாமணியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.00 |
| | மொத்தத் தொகை | 74.00 |

மேற்கண்ட பணிகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் வரிசை எண் 1 மற்றும் 2 கண்ட பணி மேற்கொள்ள திருநெல்வேலி, நகரட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக, மண்டல செயற்பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ68.00 இலட்சம் போக மீதமுள்ள தொகையை பொது நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் 2**

தென்காசி நகர்மன்ற 10வது வார்டு உறுப்பினர் திரு.எம்.எஸ்.முகம்மது மைதீன் அவர்களால் கொண்டுவரப்படும் மாண்புமிகு "**தமிழக முதலமைச்சர்**" அவர்களுக்கு பாராட்டுகளையும் நன்றியும் தெரிவித்து தீர்மானம்.

தென்காசி நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று நகராட்சி பகுதிகளில் தினசரி குடிநீர் வழங்குவதற்காக தமிழக அரசின் 2021–22ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் **மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மானியக் கோரிக்கை எண் 34ல் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு எண் 41-IV கீழ் தென்காசி மாவட்டம், தென்காசி நகராட்சி மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கான புதிய கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டதின் தொடர்ச்சியாக, திட்ட மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம்** பணியினை செயல்படுத்திட தென்காசி நகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இருக்கும் "**தமிழக அரசுக்கும்**" மற்றும் மக்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் மாண்புமிகு "**தமிழக முதல்வர்**" அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்

## தென்காசி நகராட்சி

## 17.03.2022 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 2 | 2 | 2 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 3 | 3 | 3 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 4 | 4 | 4 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 5 | 5 | 5 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 6 | 6 | 6 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 7 | 7 | 7 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 8 | 8 | 8 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 9 | 9 | 9 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 10 | 10 | 10 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 11 | 11 | 11 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 12 | 12 | 12 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 13 | 13 | 13 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 14 | 14 | 14 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 15 | 15 | 15 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 16 | 16 | 16 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 17 | 17 | 17 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 18 | 18 | 18 | அ.கு. மன்றப்பொருள் 18க்கு ஆதரவு தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்கள் 28 நபர்கள். 4 நகர்மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்,1)திருமதி.பொன்னம்மாள் வார்டு .8, 2)சங்கரசுப்பிரமணியன் வார்டு எண்.15, 3)திருமதி.சுனிதா வார்டு எண்.23,4)லெட்சுமண பெருமாள் வார்டு எண்.30<br><br>கூடுதலான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்ததால் தென்காசி புதிய பேருந்து நிலையத்திற்கு முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் |

| | | | |
|---|---|---|---|
| | | | மு.கருணாநிதி பெயர் சூட்டுவதற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றம் தீர்மானித்தது. |

(ஒம்).R.சாதிர்
நகர்மன்றத்தலைவர்
தென்காசி நகர்மன்றம்

/ உண்மை நகல் உத்தரவின் படி/

மேலாளர்
தென்காசி நகராட்சி

# தென்காசி நகராட்சி

## 17.03.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மான நகல்

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 19 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 2 | 2 | 20 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |

(ஒம்).R.சாதிர்
நகர்மன்றத்தலைவர்
தென்காசி நகர்மன்றம்

/ உண்மை நகல் உத்தரவின் படி/

மேலாளர்
தென்காசி நகராட்சி